# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம் விரோதி வரு (1889) ஆவணிமீ 28-ம் வ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

பத்-கூ0] யாழ்ப்பாணம் காலயுத்தி வரு புரட்டாதி மீ சு உ வெள்ளிக்கிழமை (22 9-1978) [இல-உக


# சித்தாந்த விளக்கை எடுத்துக் காட்டுகின்றனர் சீலம் பொலிந்த பண்டிதமணி

## கிரியை ஞான நிமித்தம்



வைதிகம் வேத நெறி அது செறை முற்ற மிடம் சைவம். அது ஆகமநெறி.

சைவம் வைதிகத்தின் வழி வருவது. அதனால் அது வைதிக சைவம் எனப்படும்.

சைவம் சிவ சம்பந்தம். சிவத்தோடு தொடர்பு படுத்துவது.

எல்லாச் சமயமும் இருப்பது நீதி என்று சொல்வது சைவம். அதே சமயத்தில் அவற்றின் வேறுபுமிருப்பது சைவம்.

ஒன்றோடொன்று மாறுபடுகின்ற எல்லாச் சமயமுமாய். அவற்றின் வேறுமாய்,

"இராசாங்கத்தில் அமர்ந்தது
வைதிக சைவம், அழகிது"

என்று விம்மிதம் உறுகின்றார் தாயுமானவர்.

சித்தாந்தம் முடிந்த முடிபு தனக்கு மேல் மற்றொரு முடிபு இல்லாதது 'வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம்" என்கின்றது சிவப்பிரகாசம், சைவசித்தாந்தம் 'சித்தாந்தம்' எனவும் வழங்கும்.

'சித்தாந்த விளக்கில்', சைவக் கிரியைகள்பற்றிச் சிந்திப்போமாக. 'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என்பது சிவப்பிரகாசம்.

கணிதத்துக்கு விடை காண்பதற்குச் செய்யும் கிரியைகளில் வைத்து ஞானம் கிடைத்தற்குக் கிரியைகள் முக்கியமாதலை சிந்திக்கலாம்.

ஞானம் இறை ஒளி. அது, 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி' எனவும், திருவருள் எனவும்படும். அதனைப் பெறுதலே வீடுபேறு.

'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்' என்பதில், ஒன்று என்பது ஆன்மா அது உயிர் எனவும்படும் இருள் ஆணவ இருள். ஒளி இறை ஒளி. அது உயிர்க்குயிர். அநாதியிலேயே உயிரோடு அத்துவிதப்பட்டிருப்பது. அங்ஙனமாகவும், அநாதியிலேயே உயிர் மற்றொன்றாகிய இருளோடு அத்துவிதப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில உயிர்க்குயிராய இறையொளியும்,

'மிக இருளேயாம்' என்பது பெரிதும் சிந்திக்கப்பாலது. இருள் சடம். (ஒளியாகிய ஞானம் எனப்படும்) அருள் சித்து.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### புராண படனப் பூர்த்திப் படிப்பு

சென்ற தை மாதத் தொடக்கம் யாழ்ப்பாணச் சைவபரிபாலனசபை ஆதரவில் நடைபெற்று வந்த கந்தபுராண படனத்தின் பூர்த்திப் படிப்பு வள்ளியம்மை திருமணப் படலம் ஆவணித் திங்கள் 24-ஆம் நாள (9 9 78) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் விசேட பூசை ஆராதனைகளுடன் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில நடைபெற்றது.

பூர்த்திப்படிப்பில் தொடர்பாகப் பயன் விரித்துரை

### பண்டிதமணி விருது பெற்றதற்கு மகிழ்ச்சி விழா

#### பரம்பரை மட்டுவிலில்

சிவஸ்ரீ அ. சிவசாமிக் குருக்கள (மட்டுவில் சிவன் கோவில்) தலைமையில் மட்டுவில் ஸ்ரீ பஹாமுத்து மாரி அம்மன் கோவில முன்றிலில் 18-9-78 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில விருது பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களை உபசரிக்கும் விழா மிகச் சிறப்பாகநிகழ்ந்தது.

பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல, பாராட்டுப் பத்திரம் வாசித்தல, சங்கீத பூஷணம் சி. வினசித்தம்பி அவர்கள பொன்னாடை போர்த்திக் கௌரவம வழங்கப்பட்டபின, புலவர் ம. பார்வதிநாதசிவம் ஆசிரியமணி வே. சுப்பையா, புராணபடன வித்தகர் சி. சங்கரப்பிள்ளை முதலிய பல அன்பர்கள மகிழ்ச்சி உரை வழங்கினர். விழாச் செயலாளர் செல்வன் கா சிவபாலன் நன்றியுரை நவின்றனர்.

## வாரியார் பிரசங்க மாரி!

### கிருபானந்த வாரிதியில் மக்கள்!

#### அன்னை அருள் இருந்தால் வேறென் வேண்டும்!

கடவுளை நினைக்கும்பொழுதும் 'அம்மை அப்பா' என்கின்றோம். கல்வி கற்கும்பொழுதும் அன்னைமொழியே வழிகாட்டுகின்றது. ஈகை வேண்டுபவர் அம்மா இல்லை தாயே தயவு செய்யுங்கள் என்று இரப்பர்.

ஆகவே அன்னையை நினைத்து அப்பன் அருளைப் பெறுதல் வழமைதானே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற முதுரையில் முன்னையது அன்னையன்றோ!

இவ்வாறு பதினைந்து நிமிடப் பஞ்சாமிர்தச் சொற்பெருக்கில் அருட்சுவை அலங்காரச் சொற்பொழிவார் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் நெல்லிநகர்த் துர்க்காதேவி ஆலயத்தில் சென்ற செவ்வாய மாலை அம்பாள் பூசையைத் தரிசித்து வணங்கிப் பின் குறிப்பிட்டனர்.

வரவேற்புரைநிகழ்த்திய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் குமரனைக் குலதெய்வமாகக் கொண்ட அருளாளர் வாரியார் அவர்கள் அன்னை கோயிலில் வணங்குவதும் வளமாய் உரை நிகழ்த்துவதும் சாலப் பொருந்துமென்று கூறி உபசரித்தனர்.

நன்றியுரை நவின்ற திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் வாரியார் எடுத்தாண்ட "தனந்தரும்...... ......அபிராமி கடைக்கண்களே" என்பதை ஞாபகப்படுத்தி அவ்வாறே அவற்றையெல்லாம் தரும் வாரியார் வாய்ச் சொற்களே என்று குறிப்பிட்டனர்.

தக திரு வ முருகேசு (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களும் திருவாளர்கள் பண்டிதர் செ. சிவப்பிரகாசம் சே. ச சண்முகபிள்ளை க. தருமலிங்கம, சி. தம்பிையா, வே. தம்பிையா வி. சம்பந்தநாதன், சு சிவசுப்பிரமணியம் முதலியவர்களும் படிப்பிற் பங்குபற்றினர்.

இந்தப் புராணபடனத்தைப் பொறுப்பேற்று உரையாற்றி வந்த திரு. முருகேசு அவர்களுக்கும் புராணபடனத்தின்போது விசேட காலங்களில் பூசைகள நிகழ்த்திய பிரமஸ்ரீ செ பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும் புராணபடனத்துக்குப் பண உதவி செய்தவர்களுக்கும் மற்றையோர்க்கும் சபையின சமயப் பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் நன்றி கவின்றனர். ——

#### கும்பளாவளைக் கோயிலில் இரண்டு நாழிகை!

மஞ்சவனப்பதியில் மட்டும் கேட்டாற் போதாது. விநாயகர் ஆலயத்திலும் முருகபக்தரின சொற்பெருக்கைத் தைக் கேட்க வேண்டுமென்று விரதம் பூண்ட அன்பர்கள் சென்ற திங்கட்கிழமை இரண்டு நாழிகைப் பொழுதளவில ஓர் அரும் பிரசங்கத்தைக் கேட்டானந்தித்தனர்.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

### இலவசம்

வேப்பங்கன்று நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்களுக்கு நல்ல இன வேப்பங்கன்றுகளை மிலைன் தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையுள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே;
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஹூ புரட்டாதி மீ" கூ-உ வெள்ளி

## சைவக் குருமார் செய்யவேண்டியது

ஸ்ரீ ருணமயா பௌத்த தர்ம பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் உரைநிகழ்த்திய வணக்கத்துக்குரிய நாரத மகாநாயகதேர மாண்புமிகு சனுதிபதி முன்னிலையில் ஒரு முக்கியமான ஆலோசனையைச் சமர்ப்பித்ததை இங்கே எடுத்துச் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதுமன்றி அத்தியாவசியமுமாகும்.

வணக்கத்துக்குரிய தேரவின் உருக்கமான உரையின அரசும் அமைச்சர் அவையும் அரச அதிகாரிகளும் சனசமூகமும் அனைவரும் உணர்ந்து இந்த நன்னோக்கம் செயற்பட ஆவன புரிதல் வேண்டும். அந்த உரையின் உட்பொருள் மாபாதகங்களாகும் கொலையையும் கள்ளையும் அரசு விலக்க விதியமைக்க வேண்டுமென்பதே.

ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும் இந்தப் பழிச்செயல்கள் — மதுவும், மாடு ஆடு முதலிய மிருகங்களைக் கொலை செய்வதும் அறநெறி அடிப்படையில் அமையும் அரசுக்கு ஆகாதனவென்ற கருத்தின் பொருள் அடக்கத்தைச் சைவ மக்களுக்கு ஆதாரம் காட்டி விளக்க வேண்டியதில்லை! அரிவரித் தொடக்கத்திலிருந்தே பஞ்சமா பாதகங்களைப்பற்றிக் கூறாத சைவ பாட புத்தகங்களில்லை. ஆனால் நூல்களில் மட்டும் போதனையிருந்தாற் போதுமா? அவ்வழியிலே அப்போதனைகளைக் கற்போர் நிற்கவேண்டியதன்றோ தேவையானது.

அரசு இந்த ஒழுக்கநெறியைச் சட்ட வழியாக வி.லை நாட்ட வேண்டும் என்ற ஆலோசனை புதியதல்ல. எழுதா விதியாக இந்த ஒழுக்கநெறி பண்டை நாட்களிலே பாதுகாக்கப்பட்டு வந்ததை வரலாறு உறுதிப்படுத்தும். மதுவிலக்கு மிருகக் கொலை விலக்கு முதலியனவற்றுக்குச் சட்டங்களும் இருப்பது மக்கள் வாழ்வைப் புனிதப்படுத்தும்.

புத்த மத போதகர் குறிப்பாக எடுத்துக்காட்டும் இவ்வேளையிலே மற்றைய மதத்தினரும் இந்த விலக்குதல் விதிகள் சட்டமாயமைதல் வேண்டுமென்று ஒரே குரலில் உரைப்பது பயனளிக்குமல்லவா?

சைவ மக்கள் சார்பாகத் தேவத்தான குருக்கள்மாரும், சங்கத் தலைவர்களும், கல்லூரி அதிபர்களும் இந்த வேண்டுகோளை இப்பொழுதே சமர்ப்பித்தல் நன்று.

நாம் வாழும் நகரின் சூழல் வளமானதாய் ஒழுக்கத்துக்கு வாய்ந்ததாய் இருந்தாலன்றோ வாழ்க்கை புனிதமாயோங்கும்.

இதற்காகவே புராதன காலத்திலே புண்ணியன் கோயிலும், பொய்கையும், பூங்காவும், பழனமும் பொலிந்த இடங்களே மங்கள மயமாய் விளங்கின

அவ்வாறின்றி மதுக்குதமும் மாமிசக் கடையும் ஒவ்வாதன பிறவும் உள்ள ஊர் ஊராகுமா? அங்கு மன அமைதி உண்டாகுமா?

ஊரமைப்புச் சீராய் வருவதற்கு ஆலயங்களும் அந்தணர்களும், ஞானிகளும், அறிஞர்களும் உதவுதல் வேண்டும்.

ஆகவே மது விலக்கையும், மிருக பலியையும், ஆடு, மாடு, கோழி இவைகளைக் கோவிலுக்கென நேர்த்தி செய்து, அவைகளைக் கோவிலிலேயே ஏலம் கூறி விற்க, அவை ஆங்கிருந்து நேரே இறைச்சிக் கடைக்குக் கொண்டு செல்லப்படும் மதியீனத்தை மக்கள் தாமாக உணர்ந்து கைவிடுவதையும் அரச சட்ட மூலம் நிகழ்த்துவதற்கு சமயாசாரிகளின் பணி வேண்டற்பாலது என்று நாம் மீண்டும் எடுத்துக் காட்டுகின்றோம்.

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

## சித்தாந்த விளக்கை

பந்தகாலத்தில் இருள் மேவிடும், முத்திக் காலத்தில் அருள் மேவிடும்; அருள் மேவிட்ட வழி, இருள் உயிரை அணுகுவதில்லை.

இருள் மேலிட்டிருக்கும்போது உயிர் தன்னோடு அத்துவிதப்பட்டு உயிர்க்குயிராயிருக்கும் உள்ளொளியைப் பெற முடியாதிருந்தபோதும்,

அஃதாவது,

'ஒன்று மிகினும்'

இருள் மேலிட்டிருப்பினும், 'ஒளி உள்ளம் கவரும் சித்தாகிய ஒளி உள்ளத்தை இருளிலிருந்து ஈர்க்கும்' உள்ளம் - உயிர். கவராதேல் என்பதனால கவரும் என்பது பெறப்பட்டது. 'ஒன்று மிகினும்' .... .... ... ... திருவருட் பயன்.

உயிரை இருளிலிருந்தெடுக்க ஈர்க்கும் ஈர்ப்பே நள்ளிருளில் நட்டம்.

ஒளி காந்த சக்தி போன்றது; உயிர் இரும்பு போன்றது: உயிரை அது ஈர்த்துக்கொண்டேயிருக்கும்

ஈர்ப்பின் விளைவே சகலாவஸ்தை, உயிர் சரீரத்தோடு கூடிய நிலை,

சூரிய ஒளியை எதிரே பெறமுடியாத கண்ணுக்கு, மூக்குக் கண்ணாடி போன்றது, இந்தச் சரீரம். இந்தச் சரீரத்தின்மூலம் ஒரு சிறு அளவாயினும், உயிர் தன்னோடு கலத்தற்கு அந்த அருள் ஒளி இந்தச் சரீரத்தை உயிர்க்களித்திருக்கின்றது.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம் என்பது நாவலர் வாக்கு.

கடவுளை வணங்குதல் ஆவது. ஞான நிமித்தம் ஆகிய கிரியைகளை மேற்கொள்வதாம். முத்தியின்பம் ஞானப் பேறு.

இந்தச் சரீரம், ஞானத்தை அடைதற்கு நிமித்தமாகிய கிரியைகளைச் செய்தற்கே கிடைத்தது.

கிரியைகளை முன்னிட்டு குருத்துவம்பற்றி நாவலர் பெருமான் விடுக் கண்ணீர் பின் வருமாறு:

"சைவ சமய குருத்துவத்துக்கு அவசியம் வேண்டிய கல்வி அறிவு ஒழுக்கங்களும் சைவ சித்தாந்த நூலுணர்ச்சியும் சைவக் கிரியைகளை மந்திரக் கிரியா பாவனை வழுவாவண்ணம் செயயுந் திறமையுஞ் சைவ சமய போதனைகளும் இலலாதவரைச் சைவ சமய குருமாரெனக் கொண்டு, உங்கள் கைப் பொருளை அவருக்கு இறைத்துவிட்டு, அவரிடத்தில் வேலை வாங்காது பராமுகர்களாய் இருப்பது நீதியா? தவசிப் பிள்ளைகளும் தங்கள தொழிலிலே பரீட்சை கொடுத்தே தவசிப் பிள்ளைகளாகுகின்றார்களே! பரீட்சை சிறிதும வேணடாத உத்தியோகமாவது, உலகத்தை முழுதாளும அரசரும் பெறுதற்கு அருமையுடைய ... கனைப் பெறும மிக மேன்மைபெறற உத்தியோகமாகிய சைவ சமய குருவுத்தியோகம் ஒன்றேயாய் முடிந்தது! இஃது என்னை யென்னை! கொடுமை! கொடுமை!

பரீட்சைக்குக் கொடுத்த கருத்தில் என்ன கேட்கப்பட்டதென்பதை விளங்கும் ஆற்றல் இலலாத மாணவன் குறித்த நேரம் வரை ஏதோ கீறிக்கொணடிருப்பான். அக கீறுகளுக்கும் விடைக்கும் சம்பந்தம உணடா?

இவ்வாறேதான் ஞானத்துக்கும் கிரியைக்குந் தொடர்பு தெரியாதவர்களே ஏதோ செய்து வருகின்றார்கள்.

தொடர்பு தெரிய வல்லவர்களும் ஏதேதோ காரணங்களை சொல்லிக் காலங் கழிக்கின்றார்கள். அவர்களுககாதல், இந்தச சித்தாந்த விளக்கு.

கிரியைகளின் அருமைகளைப் புலப்படுத்தி அச்சமோ கூச்சமோ விளைக்குமாயின், அவ்வளவே இந்நூலின் தோற்றவுக்குப் போதியதாம்.

கிரியை விசேஷத்தால் மந்திரசக்தி பரவும் கோவிற் சந்நிதி, மின்சக்தி பரவுமிடத்திலும் பார்க்க அச்சத்துக்குரியது. உள்ளும் புறமும் புனிதர்களே கோயிற் சந்நிதியிற் பிரவேசிக்க முடியும். புனிதம குறைந்தவர்கள் பிரவேசிப்பாராயின், குளிக்கப் போய்ச் சேறு பூசுவதாம்.

மந்திர சக்தியின் நிலையையும், தன்னிலையையும் உணர்ந்த ஒருவர் குருக்கள் வேலை பார்க்க உடன்படாமல் ஓட்டமெடுக்கவுங் கூடும்' என்று ஒரு மகான் கூறியது நினைவுக்கு வருகின்றது. காரைக்கால் தெய்வம் தலைவால் நடந்த புனிதத் தலத்தின், கால் வைக்கக் கூசினர் சம்பந்தப்பிள்ளையார்.

'மந்திர சக்தி வாய்ந்த ஞானநிமித்தமான கிரியைகள் பற்றி வடமொழியிலும் அநேக நூல்கள் உண்டு அவற்றை ஆராய்ந்து, சைவக் கிரியைகள் சித்தாந்த விளக்கில் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் ஆசிரியர் பண்டிதர் திரு மு கந்தையா பி. ஏ. அவர்கள்; மும்மொழி அறிவர்; சித்தாந்த சாஸ்திரங்களிலும் திருமுறைகளிலும் மூழ்கித் திளைப்பவர்; அவர் எப்பொழுதும் தவப்பொழுது; அவர் வாழ்க்கை சமய

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

நேயர் நெஞ்சம்

## 'சிகப்புநாடாச் சேவை தவிர்க்க முடியாததா?

எமது அரசாங்கம் தார்மீகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதாகக் கூறப்படுகின்றது. நாட்டின் சாதாரணக் குடிமகனுக்கும் நியாயமான வசதிகளும் அத்தியாவசியத் தேவைகளும பாரபட்சமின்றி உரியநேரத்தில கிடைக்கச் செய்வதன் மூலமே இது சாத்தியமாகும். மனிதனது அடிப்படைச் சுதந்திரமான எவற்றுக்கும் குறுககே நிர்வாகச சீர்கேடோ, தாமதமோ நின்று அககுடி மகனை அவனது உரிமைகளை இழக்கும்படி செய்யக்கூடாது இப்படிப்பட்ட கொள்கைகளுக்கு எதிரான ஒரு அநுபவம எனக்கு ஏற்பட்டுள்ளதால அதைத தங்கள் உயரிய பததிரிகைமூலம உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கலாமென எண்ணுகின்றேன

நான் 1-7-78 தொடக்கம் இந்தியாவில உயர் கல்வி ஒன்றினைப் பெறத் தெரிவுசெய்யப்பட்டேன. இதனை எதிர் பார்த்து எனது பெற்றார் நானும் எனது சகோதரியும பிறந்த காலத்தில் வசித்த மாவட்டமான கண்டி மாவட்ட மேலதிகப் பதிவாளருக்கு எனதும சகோதரியினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கு விணணப்பஞ் செய்தேன. இவ்விரு பிரதிகளுக்கும் 20-4-78 அனறு நலலூர் உப தபாற்கந்தோரில் 6917 - ஆம் இலக்கத்திற் கடித மூலம் விண்ணப்பம் அனுப்பினேன. நிர்வாகச் சிக்கலைத் தவிர்க்குமுகமாக விணணப்பத்தை ஆங்கிலத்திலேயே செய்திருந்தேன். ஒரு மாதமாகியும் ஒரு விதபதிலும் கிடைக்காததால் மீண்டும ஞாபகப்படுத்தி 23-5-78 அனறு 7408 ஆமிலக்கப் பதிவுக் கடிதம் அனுப்பினேன். பிறப்புச் சாட்சிப்பத்திரங்களுக்குத் தேவையான அளவு முத்திரைகளும் வைத்தே அனுப்பியிருந்தேன்.

எனது பிறப்புச்சாட்சிப் பத்திரம் கிடைக்காததால் நான் கடவுச் சீட்டுப்பெறவோ 1-7-78 அன்று இந்தியா சென்று கல்வியைத் தொடரவோ இயலாமற் போய் விட்டது. இதுவரையும் எனதும் சகோதரியினதும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் எமக்கு அனுப்பி வைக்கப்படவிலலை! நான் அனுப்பிய முத்திரைகளும் அனுப்பி வைக்கப்படவிலலை.

எனது நண்பர்கள்மூலம் கண்டிக் கச்சேரியில் விசாரித்துப் பார்த்தபோது அங்கு எமது விண்ணபபங்கள இரண்டும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவை மாத்திரம் விநியோகிக்கப்படவிலலை யென்றும் பிறப்புச் சாட்சிப பத்திரப் பதிவில பழுதேற்பட்டுத் திருத்தம் இடம்பெறறதால் கொழும்பு பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பபபட்டிருப்பதாகவும அறிந்தோம், 1957 - ஆம் ஆண்டில் பிறந்த எனது பதிவிலும பழுதேறபட்டு 1954 இல் பிறந்த எனது சகோதரியின பதிவிலும பழுதேறபட்டதென்பது பொருத்தமானதலல!

இபபிறப்புச்சாட்சிப் பிரதிகளைப் பெற நான மேறகொணடு என்ன செய்ய வேண்டுமெனபதை உரிய திணைககளததைச் சேர்ந்தவர்கள் தெரிவிப்பார்களா? கண்டிக் கச்சேரியில் இருந்து எமது பிறப்புச் சாட்சப் பததிரங்களைப் பெறமுடியாதாயின் நான் அனுப்பிய எட்டு ரூபா பெறுமதியான முத்திரைகளை மீண்டும பெற யாது செய்ய வேண்டும்? இஃதேபோல் இன்னமும் அவதியுறும மாணவர்கள் எத்தனை எத்தனை பேரோ?

அதுவேதான் நிர்வாகத்தீர்ப்பாக அமையுமென்றால் மக்களின் தேவைகள நிறைவேற்றப்படுவதற்கு எந்த வித்த தார்மிகக் கொள்கைகளும உதவ முடியாது போய்விடும் என்பதை அரசும் அரச அதிகாரிகளும் கவனத்திற் கொள்வார்களா?

**பாதிக்கப்பட்ட மாணவன்**
கன்னியங்காடு, 10-9-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை

# அருள்மிகு துர்க்காதேவி ஆலயச் சித்திரத்தேர் சிறப்பு மலர்

சித்திரத்தேர்ச் சிறப்பு அத்தனையும் பொருந்திய இம்மலர் வீசும் மணம் என்றென்றும் நிலவுந் தன்மைய . ஞானிகள், ஆதீன சுவாமிகள், பண்டிதமணி, மன்றத் தலைவர்கள், 'கலைமகள்' ஆசிரியர் மற்றும் கவிஞர்கள் பலரின் அரிய உள்ளக்கிடக்கைகளை உள்ளடக்கிய இம்மலர் வெளியீட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் சுவதிதமிழ்ச்செல்வி தங்கமமா அப்பாக்குட்டி அவர்கள் சித்திரத்தேர்ச் சிறப்புமலரில் ஒரு இதழ்:-

## பக்தர் பரவசத்தாற் படிந்த சித்திரத் தேர்

வெண்பா

பழங்கோயிற் பிள்ளை பரன்மாவை காசி
விளங்கு விநாயகர் மேவ — உளங்கோரும்
தெலலித் திருப்பதியில் தங்கம்பாள தேவிதுர்க்கை
சொல்லுந் தரமோ துணை.

பத்தியுளப் பண்பாய்ப படிந்தவர் பற்றுநெறி
முத்திரையாய் முன்னோர் முயற்சியது — சித்திரத்தேர்
தேவிதுர்க்கை சீராயத் திகழ்ந்திவரச் செய்தாரோ
ஓவிதத்து நுண்கலையின் நாண்.

கலிவெண்பா

முத்தியின்பஞ் சேர முனைவதற்கே இப்பிறவி
நித்தியனின் நல்லருளால் நேர்ந்ததச் — சித்திபெறக்
கண்ணுதற்றெம ஈசன் கருணை கடாட்சமாய்
நண்ணியமெய் வேதமங் நான்குடனே — அண்ணலார்
தந்த சிவாகமங்கள் சாத்திரங்கள் தோத்திரங்கள்
சிந்தை திகழவைக்குஞ் செம்மையிலே — வந்த
சிவசமயத் தோர்தம் திறனளவில் வாய்த்த
தவமுஞ் சர்யை கிரியை — நவமாகத்
தொண்டியற்றும தூய்மை துலங்குகின்ற தெல்லிநகர்ப்
பண்டியங்கும் துர்க்கை பராசக்தி — கொண்டதிருக்
கோயில் அடியார்கள் கும்பிட்டங் கேத்திநிற்கத்
தாயிவள்தான் தக்கவண்ணம் தாங்குகின்றாள — ஆயிரம்
ஆயிரமாய்ச் சேயிழையார் ஆடவகையோர் அவ்விழாக்கள்
ஆயநெறி கண்டுகளித் தானந்தம் — பாயவெள்ளம்
ஆற்றலெலாம் அன்னைதுர்க்கை ஆக்கியதும் — ஆலயமோ
போறறுகவின் பான்மை பொலிந்துவரும் — பேற்றினைச்
சாற்றமொழி யாமறியேம் தாரணியிற் சைவநெறிக்
கேற்றதலம் இங்குண்டென் றேசொல்லி — ஆற்றுப்
படுததுவதே பத்தர் பணியாகும் பண்பின்
எடுததுக்காட் டாக இறைவி தொடுத்த தலம்
நாழிகைக்கோர் தோற்றமுப நாளுககோர் ஏற்றமுமாய்
ஏழிசையின் இன்ப மெனவோங்க — வாழியவே
துர்க்கை துணையடிகள் சூடுகின்ற மானுடர்
வர்க்கமெலாம் மாநிலத்தில் வாழ்வுபெற — அர்ச்சனையின்
சின்னமாய்த் தோன்றுமிச் சித்திரத் தேர்கலைநுண்
வண்ணமாய் வானவரும் வாழத்திநிற்க — மன்னுசைவம்
மண்ணுலகில் மாண்புயர மாதவததோர் மல்கிவர
தண்ணளிசெய் செந்தமிழும் சால்போங்கப் — பெண்ணரசி
செய்யதிரு வீதிவலம் சீரூர வேதவொலி
தெய்வநெறி அந்தணர்கள் சிந்தையொடு பெய்யத்
திருமுறையின பண்ணிசை சேணெழவெண் சங்கம்
பெருநெறியில நாதம் பெருக்க — கருப்பணைய
மங்கல வாதத்தியத்தில் மாவிபுணர் வர்ணமெழ
பொங்கடியர் வெள்ளம் புரண்டோடி — எங்கணுமே
அன்னைக்(கு) அரஅரவென ஆர்ப்ப அசைந்திவரும
கன்னிகை கதிரவனபோற காந்திநன் — மனனவே
மாலற கேய மலிநதவர் மேவுமும்
ஆலயந் தானும் அரனெனச் — சாலுமென்ற
போதம புகடடுவான் போலநன் கூர்தலும்
பேதஞ்செய் மும்மலப பேயகன்று — மேதினியில்
தீமையைச் சங்கரிததுச் சிட்டபரி பாலனம்
தாமியற்றும் ஆறறலமை தாயென்று — நாமறியத்
தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான எஙகள பிரானென்ற — முன்னுரையை
ஆன்மாக்கள் தாமறிய அன்னைதுர்க்கை அம்பிகையும்
தான்இவரும் தங்கமயச் சால்புசெறி — மேன்மைகொள்
தேர்காண்மின் தேசுறுமின் தேவிதிருச் சீர்பார்மின்
ஊர்தியிதன் ஒண்பொருளை உற்றறிமின — ஊனுராய்
வீசும் இறையொளியின் மின்தோமின் வேதநெறித்
தேசும் சைவமதச் சீருமாய் — பேசுமிந்தச்
சித்திரத்தைத் தேவரறி சிற்பத்தைத தெய்வநெறி
முததமிழை மெய்ஞ்ஞான மூதறிவின — முததிரையைக்
காண்பாரே காணபர். கவுரியன்னை கண்ணருளைப்
பூண்பாரே புண்ணியர். பூர்வீக — மாண்புடையீர்
வம்மின், வடம்பிடிமின், வாழ்த்துமின், போற்றுமின்
தம்முள்ளவப் பளதுர்க்கைத் தாய்.

— நம, சிவப்பிரகாசம்

## வாரியார் பிரசங்கம்

(1-ம் பக்க வளர்ச்சி)

### மஞ்சவனப் பதியில் மக்கள் தஞ்சம் புகுந்தனர்!

கேட்டுக் கேட்டுத் திரும்பவும் கேட்க வேட்கை கொள்ளும் அன்பர்கள் ஆயிரம் ஆயிரமாகச் சில தினங்களாகக் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில் திருவீதிகள் யாவும் நிறைந்து பொலிந்து பெருவீதி மருங்கெங்கும் கடல் போலப் பரவிநின்று செவிசாய்க்க முருகன் திருவருளும் கிருபானந்த வாரியார் கந்தபுராணக் கருத்தைக் கனிரசமாகப் பிழிந்து தேன் சொட்ட வாரி வழங்கிய நிகழ்ச்சி பெரும்வைபவமாகும்.

## சித்தாந்தவிளக்கு

(2-ஆம் பக்கத்து வளர்ச்சி)

வாழ்க்கை; அவருடையஅறிவுச் செல்வம் 'பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று'; பல வேறு இடங்களில் சித்தாந்த வகுப்பும் புராண வகுப்பும் நடாத்திவருபவர்; இவ்வாறுபகோர் 'ஊருணி'யைக் காண்டல் அரிது அரிது.

ஆசிரியர் அவர்களைப் பயன் செய்யும் முறையிற் பயன்செய்யும் மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தை எத்துணை முறை பாராட்டினும் பாராட்டு முற்றுதல் எய்தாது.

சித்தாந்த விளக்குக் கிரிதீபம்' ஆகுக.

## இலவச நூல்

தேமதுரத் திருமுறைகள் உலகெங்கணும் போற்றப்பட வேண்டுமென அயராது உழைத்து வரும் யாழ்ப்பாணம் திருமுறை மன்றத்தினர் அவர்களது பணிக்கு அணி செய்யும் வண்ணம் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த பொற்கிழிப் பதிகத்தை 17-9-78 அன்று இலவச வெளியீடாக மக்களுக்கு வழங்கினர்.

கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் இந்நூல் வெளியிடப்பெற்றது.

## கைகூப்பித் தொழ நிற்போம்?



பக்தர்: "நமக்கு ஒரு வாயும், ஒரு வயிறுந்தானே தந்திருக்கிறான்...? வெள்ளிக்கு - வியாழனுக்கு வெவ் வேறு வயிறு தந்துள்ளானா? இல்லையே...! அப்படியானால் நாம் வெள்ளி ஒரு பானையிலும் வேறுநாட்களில் வேறுபானையிலும் சமைக்கலாமா? என்கிறார் வாரியார்!

சித்தர்: ஆகாதுதான்! வாரியாரது அன்புரை கேட்டு தாவர [illegible] தொழும் அன்பர்களல்லவா!

(நாயன்மார் — நாதன்)

## வாரியிவர் வாழி!

தெய்வத் திரு பெருக்கும் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கந்தபுராண விரிவுரை ஆற்றியதைப் பாராட்டு முகமாக 19-9-78 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் யாழ். நாயன்மார்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் வழங்கப்பெற்ற போற்றுதற் பாமாலைகளுள் ஒன்று வருமாறு:-

முதிர்ந்தகனி எழுந்தவமு துயர்ந்தசுவை என்றால்
முற்றறிவின் வாரியர்சொற் கேதுவமை சொல்வோம்?
இதந்தருமன் பினிமையுறக் கடம்பனது புகழை
இவருரைக்கக் கேட்பதுபோல் இனிமைபிறி துண்டோ?
வதம்புரிய எழுந்தருளும் சூர்பகைவன் வேல்போல்
வயிரவொளிச் சொல்லெடுத்து ஞானமதி விட்டு
நிதந்தருவர் முருகனது கிருபையினி லோங்கும்
நேசர்கிரு பானந்த வாரியிவர் வாழி!

உ

சைவ பரிபாலன சபை

## சைவ சமய பாடப் பரீட்சை

### 1977

### பாடசாலைப் பரிசில் பெறுபவர்

முன் வளர்ச்சி — 3

27 வரணி மகா வித்தியாலயம்
- சீதா ஆறுமுகம் 4
- சரஸ்வதிப்பிள்ளை கந்தையா 5
- சிவானந்தன் வேலாயுதம் 6
- கமலரதி மாணிக்கம் 8
- தேவராணி மகாலிங்கம் 9
- யோகம்மா கந்தையா 10

28 இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
- சுகுமாரி சுந்தரலிங்கம் 3
- சாந்தினி நடேசன் 5
- இராஜினி இரத்தினபாலசிங்கம் 5
- கயல்விழி வல்லிபுரம் 6
- ஜோதீஸ்வரி வைத்திலிங்கம் 7 (கண் பார்வையற்றவர்)
- சவானந்தி சோமசுந்தரம் 8
- அருந்தவநாயகி சோமசுந்தரம் 9

29 நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை
- விசாலாட்சி சுப்பிரமணியம் 3
- மாலினி குமாரசாமி 4
- புஷ்பலதா நடுவில் 6
- நாவலன் சபாரத்தினம் 8
- தயாபரம் செல்வநாயகம் 8

(வளரும்)

## ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல: 13871

1 பொன்னையா வீரகத்திப்பிள்ளை,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி — வழக்காளி

எதிராக

1 முருகேசு சுப்பிரமணியம்,
2 பெண் மதுரை மீனாட்சியம்மா
கரவெட்டி வடக்கு, கரவெட்டி — எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த நீதிமன்றத்தால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் அதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ந் திகதி (15-11-78) புதன் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று பொலிகண்டிக் குறிச்சி இறை துங்கையபுலம் நி. ப. 4 1/2. ஷெ செய்கை துங்கையபுலம் நி. ப. 7/8. எல்லை கிழக்கு முருகேசு பெண் அபிராமியம்மையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு காசிநாதர் செல்லப்பாவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு சிதம்பரநாதர் கந்தவனத்தின் உரிமைக்காரருக்கும மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு ரோட்டு இவ்வெல்லைகுட்பட்ட நிலம், பனைகள் வடலிகள் அடங்கலிற சொரியலாய் நாலில் மூன்று பங்கில் ½ பங்கும், (பதிவு A 22/179).

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா 4509-60 |
| வட்டி ரூபா 2440-00க்கு 10 வீதப்படி 17-2-1977 தொடக்கம் 23-6-1978 வரை | 390-40 |
| | 4900-00 |
| வட்டி ரூபா 4900-00க்கு 9 வீதப்படி 24-6-78 தொடக்கம் 15-11-78 விற்பனவு வரை | 165-87 |
| மொத்தம் ரூபா | 5065-87 |

(வழக்குச் செலவு இதிற் சேரவில்லை.)

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்
விலை மதிப்பாளரும்

வி எம். ரோட்,
பருத்தித்துறை. 151/78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

மந்திரங்களான வெலாம் அருளிச் செய்து,
மற்று அவற்றின் வைதிகநற் சடங்கின்வந்த
சிந்தை மயக்குறும் ஐயந்தெளிய எல்லாம்
செழுமறையோர்க்கு அருளி அவர்தெருளும் ஆற்றால்
முந்தைதமுதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ்செழுத்துமே என்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச்செய்தார்.

After graciously chanting all the Mantiras and clearing the doubts that confused the minds of the brahmins in the Vedic rites, he hymned the sacred Devara Pathicam ending with the words அந்தியுள் மந்திரம் அஞ்செழுத் துமே, thus enlightening them and making them realize that the Sri Panchaksharam of the Lord is the original source of all the Mantiras.

Hindu Organ

Friday, September, 22. 1978.

## GIFTS TO GOD!

It is time that the Saiva Public understood the attributes of God to enable the people live a truly religious life,

In this context we refer our readers to the chapter on 'Popular Saivaism' in the 'Glories of Saivaism" written by Saiva Periyar Shivapadasundarampillai, the centenary of whose birth was celebrated last week most enthusiastically.

Says he: "The offer of gifts to God in return for the granting of requests is based on the gross misunderstanding of the attributes of God." Concluding this chapter Saiva Periyar makes a fervent appeal to his countrymen: "Popular Saivaism must go. Religious education must come It must reach both young and old. It can easily reach those fortunate youngsters who are studying in Shaivite Schools and state schools. Shaivite Societies ought to carry religious knowledge to Shaiva children studying in schools of alien faiths They must also find means of taking the light of religion to the grown-ups. Then alone can Shaivaism shine in all its glory."

"Popular Saivaism" is explained by Saiva Periyar as, "the religion of those *who have no idea of the content of the Shaiva Shastras*" — the italics are ours.

We are, however, confident that the special endeavour that is being spiritedly made by the Saiva Paripalana Sabhai through the Sub-Committee on Religious Propaganda to prevent the nefarious activities of unscrupulous managers of temples and other irreligious persons to encourage slaughter of animals, taking advantage of the offerings of unsuspecting worshippers, will bear fruit and make Shaivites true Shaivites.

Propaganda can be inspiring only if it is undertaken by devotees with a sincere feeling of patriotism. Verbosity and perorations cannot produce the required results unless the propagandists mix with the people and teach them the practice of religion.

## Saiva Periyar Centenary Reproduction

## GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram B. A.*

(continued from last issue)

Panchaksharam not only includes all entities but also shows the relationship in which they stand The evolution of the soul, its past, present and future are all very clearly pictured in it. The Five Letters may be arranged in two ways In one of these, the first letter is the suppressor of Malam and in the other, the first letter is the Shivam. The former is intended for those who are worldly minded If they meditate on it they will gradually give up worldly-mindedness and become Godly-minded. Then they will be entitled to contemplate the second form. The second form leads the Godly-minded to one-ness with God and is hence called Mukti-Panchaksharam. In these two forms of Panchaksharam we see at a glance what we essentially are, how mistaken we are in our view of ourselves, how we find utmost satisfaction in wallowing in the mire of worldliness and how reluctant we are to approach the sparkling, healing, transparent spring which lies beside us. We also see what infinite value we set on things of no value and how we regard as negligible the real infinities, God and Soul In the Panchaksharam we see for the first time, what we intrinsically are, apart from the malams—from our body and from Anava with which we ordinarily identify ourselves For the first time, we also see our loving Lord who has given us His Grace which assumes two forms, one of which stands on our right and the other on our left nursing us, feeding us and looking after us, day and night One of these wears out the fetters which have made us impotent, the other makes us divine The Panchaksharam is really glorious to behold.

The contemplation of Panchaksharam does not end in beholding its glories It is an image of God and, like other images, acts on the soul The soul's reactions to it are similar to those that occur during the worship of other images. Besides, it is a power by itself (மந்திரசத்தி) It does not owe its power to any other thing. On the other hand, other images owe their divinity to Panchaksharam, and to other mantrams which are its satellites. To the contemplator, it gives the power to protect himself from the inroads of Anava. The word Mantra itself means that which protects those who contemplate it.

Whereas most images do not bring home the worshipper the fact of his being bound by Anava, the Panchaksharam places before him his state of bondage. It places the whole situation clearly, unmistakably, forcefully and convincingly. The first thing that is preached to him by the Mukti Panchaksharam is the endless Love of God which is shown in the second letter. He sees God and his Love distinctly. The next thing that catches his eye is vileness of the Anava which has blinded him But he also sees with a relief and delight the eye-surgeon who stands between him and Anava and is slowly removing the cataract. The sight of God and of His two gifts, the loving nurse on his left and the eye-surgeon on the right, melts the heart of the worshipper who, hence, pours his whole love on God. He sees that his intimate companion, the Anava, with whom he has practically identified himself, is a hardened cutthroat. This is to him a new vision. He makes up his mind to get out of the reach of Anava.

The second set of thoughts that comes to him in the contemplation of Panchaksharam is the values of things Of the three malams that which makes a direct appeal to him is Maya. His body is a product of Maya. The material universe and the mental universe are all products of Maya. But Maya is insentient and inanimate. On the other hand, he himself is sentient and animate The products of Maya are ephemeral. They come and go and finally involve into primordial Maya. Realising his superiority over the things of this world, he makes up his mind not to condescend to be the slave of any of them. He has been a slave of most of them, a slave not only of pleasant sensations but also of unpleasant sensations. Tobacco has an unpleasant taste. Still there are people who have become slaves of tobacco for the sake of other experiences. The taste of opium is worse and opium does greater harm than tobacco The opium eater is the helpless slave and men have become millionaires by supplying opium to its slaves. The contemplator of Panchaksharam resolves to give up not only these dangerous products of Maya but also the better class of its products. He would eat to appease his hunger but he would not be a slave to palatableness. He wears clothes to protect his body but sets no value on showy dress. He would make use of only those products of Maya which are indispensable to him. He gives no room to desires for other things. He would not allow himself to be a slave to any kind of lust, whether of wealth, of power or of the charms of other sex. A living, eternal entity would not be a slave to a lifeless, inert, transitory, non-entity. He despises it, or rather takes no notice of it. He is Chit whereas these are Achit. Chit cannot be a slave to Achit.

On the other side of the Panchaksharam he sees God who is the source of all knowledge and power, the infinite Being before whom he himself shrinks to insignificance, who is showering on him infinite love to make him an infinite Chit like himself, placing on his either side the two forms of his love, the Parashakti and the Adishakti to illumine him, to help him break the Anavic fetter and to confer on him the eternal bliss of being one with God He has to choose between kinship with Anava and kinship with God, The Panchaksharam gives him no room even for choice as the charms of the other side have been annihilated by it. He has only one path before him and walks along that path to the Feet of God.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, September 22, 1978.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org